# <u>அறிவிப்பு</u>

2025-26 ஆம் ஆண்டு கல்வியாண்டிற்கான தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு மருத்துவ கல்லூரியிலுள்ள மருத்துவம் சார்ந்த சான்றிதழ் பாடப்பிரிவுகளில் மாவட்ட அளவிளான சேர்க்கை வாயிலாகவும் அதனை தொடர்ந்து முன் விண்ணப்பமில்லா நேரடி சேர்க்கை முறையிலும் நடைபெறும் அனுமதிக்கான விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த நபர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

## 1. வழங்கப்படும் சான்றிதழ் பயிற்சிகள் மற்றும் காலியிடங்கள்:

இம்மாவட்டத்திலுள்ள தூத்துக்குடி அரசு மருத்துவக் கல்லூரியில் சான்றிதழ் படிப்புகளுக்கு மொத்தமாக 167 காலியிடங்கள் உள்ளன. காலியிடங்கள் தொடர்பான விவரங்கள் www.gtkmc.ac.in மற்றும் https://thoothukudi.nic.in/ என்ற வலைதளத்திலும், தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரியின் அறிவிப்பு பலகையிலும் கிடைக்கப்பெறும்.

| வ. எண் | பாடப்பிரிவின் பெயர் | தகுதி | OC | BC | BCM | MBC / DNC | SC | SCA | ST | Total |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| (i) | அவசர சிகிச்சை தொழில்நுட்ப வல்லுநர் | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | | 5 | 1 | 4 | 3 | | 1 | **14** |
| (ii) | சுவாச சிகிச்சை தொழில்நுட்ப நிபுணர் | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 5 | 5 | 1 | 5 | 3 | 1 | | **20** |
| (iii) | மயக்க மருந்து தொழில்நுட்ப வல்லுநர் | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | | 9 | 2 | 9 | 6 | 1 | | **27** |
| (iv) | அறுவை அரங்கு தொழில்நுட்ப வல்லுநர் | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 1 | 10 | 1 | 7 | 6 | 1 | | **26** |
| (v) | எலும்பியல் தொழில்நுட்ப வல்லுநர் | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி | 11 | 9 | 1 | 7 | 6 | 1 | | **35** |
| (vi) | பல்நோக்கு மருத்துவமனை பணியாளர்கள் | 10 ஆம் வகுப்பு தேர்ச்சி | 10 | 13 | 2 | 10 | 8 | 1 | 1 | **45** |
| **மொத்தம்** | | | 27 | 51 | 8 | 42 | 32 | 5 | 2 | 167 |

## 2. தகுதி:

**(i)** 31-12-2025 அன்று விண்ணப்பதாரர் 17 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும்.

**(ii)** தேர்வுக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டவறாக பத்தாம் வகுப்பு / மேல்நிலைப் பள்ளி படிப்பில் தேர்ச்சிப் பெற்றிருக்கவேண்டும்.

**(iii)** இடஒதுக்கீடு: சேர்க்கையில் மாற்றுத்திறனாளிகளுக்கான 5% இடஒதுக்கீடு உள்ளிட்ட தமிழ்நாடு அரசின் இடஒதுக்கீடு நடைமுறை பின்பற்றபடும்

**3. விண்ணப்பிக்கும் முறை (கட்டணமில்லை) :**

விண்ணப்பப் படிவங்கள் 04-09-2025 முதல் [www.gtkmc.ac.in](http://www.gtkmc.ac.in) மற்றும் [https://thoothukudi.nic.in/](https://thoothukudi.nic.in/) இணையதளத்தில் இலவசமாக கிடைக்கும் விண்ணப்பதாரர்கள் படிவத்தை பதிவிறக்கம் செய்து, முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை 12-09-2025 அன்று அல்லது அதற்கு முன்னர் தூத்துக்குடி மருத்துவக் கல்லூரி முதல்வர் / துணை முதல்வர் அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**4. அட்டவணை**

| | | |
|---|---|---|
| i. | விண்ணப்பங்கள் பெறப்படும் நாள் | 08-09-2025 முதல் 12-09-2025 வரை |
| ii. | தகுதி பட்டியல் வெளியிடப்படும் நாள் | 16-09-2025 |
| iii. | பாடப்பிரிவில் சேரும் நாள் | 20-09-2025 |
| iv. | நேரடி மாணவர் சேர்க்கை நடைபெரும் நாள் (மீதமுள்ள மாணவர் சேர்க்கை இடங்களுக்காக) | 22-09-2025 லிருந்து |
| v. | முழு மாணவர் சேர்க்கை செயல்முறை நிறைவுப்பெறும் நாள் | 30-09-2025 |
| vi. | வகுப்புகள் தொடங்கும் நாள் | 06-10-2025 |

**5. கலந்தாய்வு நடைபெறும் இடம்:**

அரசு மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி மாவட்டம்.

**6. தேவைப்படும் ஆவணங்கள்:**

i. மேனிலைப்பள்ளி மற்றும் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்.
ii. மாற்று சான்றிதழ்
iii. இருப்பிடச் சான்றிதழ் (பொருந்துமாயின்)
iv. சாதிச் சான்றிதழ்
v. வயதுச் சான்று(பிறப்புச் சான்றிதழ் / பள்ளிச் சான்றிதழ்)
vi. மாவட்ட மருத்துவ வாரியத்திடமிருந்து பெறப்பட்ட மாற்றுத்திறனாளி சான்றிதழ் (பொருந்துமாயின்)
vii. ஆதார் அட்டை அல்லது புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை

**7.** தேர்வு செய்யும் நடைமுறை பரிந்துரைக்கப்பட விதிகளின்படி முற்றிலும் தகுதி மற்றும் வகுப்புவாரி இடஒதுக்கீட்டின் அடிப்படையில் அமையும் கலந்தாய்வின் போது ஒதுக்கீடு ஆணைகள் அந்த இடத்திலேயே வழங்கப்படும்.

**8.** சுகாதாரத் துறையில் வேலைவாய்ப்பை அதிகரிக்கும் வகையில் திறன் அடிப்படையிலான சான்றிதழ் பாடப்பிரிவுகளில் பயில்வதற்கு இந்த வாய்ப்பை தகுதியுள்ள மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**9.** இந்தப் பாடப்பிரிவுகளில் சேர்க்கப்பட்ட மாணவர்கள், பொருந்தக்கூடிய விதிகளுக்கப்பட்டு, ”வெற்றி நிச்சயம்” திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறத் தகுதியுடையவர்களாக இருக்கலாம்.

வெளியிடுவோர்:

முதல்வர், அரசு மருத்துவக் கல்லூரி, தூத்துக்குடி மாவட்டம்,
நாள்: 03.09.2025

இடம் : தூத்துக்குடி